

# இடம் பொருள் கலைஞர்


85

**பன்னீர் பெருமாள்**

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம்!







# தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம்!

## துயர் துடைத்த நேசக் கரம்!

**1946**-ஆம் ஆண்டு 'திராவிடநாடு' இதழில் **'பணத்தோட்டம்'** என்ற தலைப்பில், பேரறிஞர் அண்ணா எழுதிய தொடர் கட்டுரைகளில் **'பண குண்டு'** என்று ஒரு தலைப்பிருக்கும். நூற்பு மற்றும் நெசவுத் தொழிலில், நவீன தொழிற்சாலைகள் உருவாக்கத்தில், தமிழ்நாடு வஞ்சிக்கப்பட்ட கதையை அதில் எழுதியிருப்பார், அண்ணா. அரசு புதிய ஆலைகளைத் தொடங்க வேண்டும் என்றும், மூடி கிடக்கும் ஆலைகளைத் திறக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருப்பார்.

### உயிர் கொடுத்த கலைஞர்

1967-ஆம் ஆண்டுக்கு முன் தமிழ்நாட்டில் நூற்பாலைகள் அமைப்பதற்கான உரிமங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால், நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் நூல்களைக் கொண்டு நெசவு செய்ய நெசவாலைகள், விசைத்தறிக் கூடங்கள் அமைப்பதற்கான வாய்ப்புகளும், வழியும் மிக மிகக் குறைவாகவே இருந்தன. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் நூல்களை விற்பனை செய்ய, வட மாநிலங்களில் உள்ள நெசவாலைகளை நம்பியே இருக்க வேண்டிய சூழல். வட மாநிலங்களில் அவர்களுக்குத் தேவையான நூல்களைத் தயாரிக்கத் துவங்கியதும் தமிழ்நாட்டு நூற்பாலைகள் தொடர்ந்து மூடப்பட்டன. கிட்டத்தட்ட 19 ஆலைகள் மூடப்பட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்வாதாரம் இழந்து நின்றனர்.

தமிழ்நாட்டுத் தொழில் வளர்ச்சியின் மீதும் தொழிலாளர்கள் மீதும் அக்கறை கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் இதற்குத் தீர்வு காண, தனது ஆட்சிக் காலத்தில் முயற்சி செய்தார். அதற்காக அவர் உருவாக்கிய நிறுவனம்தான் **'தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம்'**. 1969-ஆம் ஆண்டு ஏப்ரல் 24-ஆம் நாள் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் உருவாக்கப்பட்டது. இந்த நிறுவனம் 1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இதற்கென 1.71 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, 5 ஆலைகளை அரசே எடுத்து நடத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால், இதுமட்டுமே போதுமானது அல்ல, என்பதையும் கலைஞர் நன்கு உணர்ந்திருந்தார். அதனால் தனியார் ஆலைகள் பல திறக்கப்பட வங்கியில் கடன் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

### தன்னிறைவுத் திட்டங்கள்

இதைத் தொடர்ந்து மின்சாரக் கட்டணம் குறைப்பு மற்றும் பல சலுகைகள் வழங்கப்பட்டன. அதனால், நூல் உற்பத்தியில் தன்னிறைவு அடையவும், புதிய வேலைவாய்ப்புகள் உருவாகவும், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் வழிவகுத்தது. குறிப்பாக, விற்பனை வரியிலும் மின்சாரக் கட்டணத்திலும் அரசு கொடுத்த சலுகையால், தமிழ்நாட்டில் இயங்கிக் கொண்டிருந்த ஆலைகளின் எண்ணிக்கை, 163-இல் இருந்து 175-ஆக உயர்ந்தது. ஆனால், 1976-ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆலைகள் ஒன்றன் பின் ஒன்றாக மூடப்படும் காட்சிகள் அரங்கேறிக் கொண்டிருந்தன.

1989-இல் மீண்டும் தி.மு.கழகம் ஆட்சிக்கு வரும் வரை ஆலைகள் நலிந்து, தொழிலாளர்கள் வாழ்விழப்பது தொடர்கதையாகிக் கொண்டிருந்தது. மூடப்படும் ஆலைகள் திறக்கப்படும் என்று, 1989-இல் தேர்தல் வாக்குறுதியாகவே அளித்தார் கலைஞர். தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்ததும், அளித்த வாக்குறுதிக்கேற்ப ஆலைகளை மீண்டும் தொடங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் கலைஞர். 10.3.1989 அன்று 'அவிநாசி தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்' திறக்கப்பட்டது. 13.3.1989 அன்று 'கோவை வாசுதேவா டெக்ஸ்டைல்ஸ்' திறக்கப்பட்டது. 12.04.1989 அன்று 'கோவை ஆர்.ஏ.வி. டெக்ஸ்டைல்ஸ்' திறக்கப்பட்டது. 21.08.1989 அன்று 'சேலம் பாலாஜி காட்டன் மில்ஸ்' திறக்கப்பட்டது.

07.03.1989 அன்று 'சுலைமான் ருக்குமணி மில்ஸ்' திறக்கப்பட்டது. 10.07.1989 அன்று 'கோவை சற்குணா மில்ஸ்' திறக்கப்பட்டது. 'பாலாஜி காட்டன் மில்ஸ்' திறக்கப்பட்டது. 25.11.1989 அன்று 'கோவை பாலாஜி ஸ்பின்னர்ஸ்' திறக்கப்பட்டது. 08.11.1989 'அமராவதி டையிங் அண்ட் காட்டன் மில்ஸ்' திறக்கப்பட்டது. 01.01.1990 அன்று 'தெய்வசிகாமணி ஸ்பின்னிங் மில்ஸ்' திறக்கப்பட்டது. கலைஞர் ஆட்சிப் பொறுப்பெற்ற ஓராண்டு காலத்திற்குள் ஒட்டுமொத்தமாக 9 ஆலைகள் திறக்கப்பட்டன. அவை வெறும் ஆலைகள் அல்ல, வேலையின்மையால் வாடிய பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வுக்கான வாசல்கள்.

### துணை நின்ற பஞ்சாலைக் கழகம்

இலவச சீருடைத் திட்டத்தின் கீழ், சீருடைத் துணிகளை நெசவு செய்வது, இலவச வேட்டி சேலைத் திட்டத்தின் கீழ், அரசிடம் இருந்து ஆர்டர்கள் பெற்று, தனது சொந்த தறிக்கூடங்களின் மூலம் உற்பத்தி செய்யும் பணி ஆகியவற்றிலும் பஞ்சாலை உற்பத்திக் கழகம் ஈடுபட்டு வருகிறது. மேலும், அரசு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்குத் தேவையான சீருடைத் துணிகள், போர்வைகள், துண்டுகள் மற்றும் இதர ரக துணிகளை உற்பத்தி செய்தும் வழங்கி வருகிறது.

அதுமட்டுமின்றி, தற்போது தமிழ்நாடு பஞ்சாலைக் கழகமானது அரசின் முகமை நிறுவனமாக செயல்பட்டு இலவச சீருடை மற்றும் வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் சீருடைத்துணி மற்றும் வேட்டி, சேலைகளைக் கொள்முதல் செய்து, சம்பந்தப்பட்ட விநியோகத் துறைக்கு அனுப்பி வருகிறது. கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அவர்கள் இக்கழகத்தின் இயக்குநர் குழுவின் தலைமைப் பொறுப்பு வகிக்கிறார்.

### செழுமைப்படுத்திய திராவிட மாடல்

ஒவ்வொரு முறையும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வரும்போதெல்லாம் பஞ்சாலைக் கழகம் புதுப்பொலிவு அடைந்து புத்துயிர் பெறுவது வழக்கம். அந்தவகையில் 2021-இல் மீண்டும் திராவிட மாடல் அரசு அமைந்தவுடன், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் பணிகள் மேலும் செழுமைப் படுத்தப்பட்டன. பழைய விசைத்தறிக்குப் பதிலாக ஏர்ஜெட் இயந்திரங்கள் வாங்கப்பட்டன. தற்போது அந்த ஏர் ஜெட் இயந்திரங்கள் மூலம் பள்ளி மாணவர்களுக்கான 9 லட்சம் மீட்டர் சீருடை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. கோவையில் மட்டுமே 12 ஏர்ஜெட் இயந்திரங்கள் செயல்பாட்டில் உள்ளன. மேலும் புதிதாக 12 ஏர்ஜெட் இயந்திரங்கள் கூடுதலாக அமைக்கப்படவுள்ளன. உற்பத்தியைப் பெருக்க இம்முயற்சிகள் பெரிதும் துணைபுரிகின்றன. ஏர் ஜெட் இயந்திரங்களுக்குத் தேவையான மின்சாரத்தை சோலார் மூலம் பெறவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**அடுத்த 20 ஆண்டுகளுக்கு மின்சார செலவில்லாமல் கிடைக்கும் இலாபத்தின் மூலம் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் இயங்கும், நெசவாளர்களின் துயர் துடைக்க உருவான பஞ்சாலைக் கழகம் இன்று தனி நிறுவனமாக அரசுக்குத் துணை நிற்கிறது.**

சோலார் மின்னுற்பத்தி வசதிகளுக்கான செலவுகள் கடன் மூலம் ஈடுகட்டப்படுகின்றன. சுமார் 25 ஆண்டு காலம் இயங்கும் வகையில் சோலார் கருவிகள் பொருத்தப்படுகின்றன. எனவே, நவீன இயந்திரங்கள் மூலம் கிடைக்கும் உற்பத்தி இலாபத்தைக் கொண்டு 5 ஆண்டுகளில் கடனை அடைத்துவிட்டு, அடுத்த 20 ஆண்டுகளுக்கு மின்சார செலவில்லாமல் கிடைக்கும் இலாபத்தின் மூலம் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் இயங்கும், நெசவாளர்களின் துயர் துடைக்க உருவான பஞ்சாலைக் கழகம் இன்று தனி நிறுவனமாக அரசுக்குத் துணை நிற்கிறது.

**...வலம் வருவோம்**

## புல்டோசர் நீதிக்குக் கண்டனம்!



உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் உட்பட பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் சிறுபான்மை மக்களின் வீடுகளைச் சட்ட விரோதமாக புல்டோசர் கொண்டு இடிப்பது, வெளிப்படையான சட்டமீறல் என உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. அந்த மாநிலங்களில் இஸ்லாமியர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டதும், அவர்களின் வீடுகளை நோக்கி புல்டோசரை அனுப்பி, அவர்களின் வாழ்விடங்களை இடிப்பது, அதை அரசே முன்னின்று செய்வதை, எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக விமர்சனம் செய்து வருகின்றன. தேர்தல் பிரச்சாரங்களில் பா.ஜ.க.வினர் அதை பெருமையாகவும் பறைசாற்றினர்.

இந்த நிலையில், புல்டோசர் நடவடிக்கையை எதிர்த்து, தொடரப்பட்ட மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், கடுமையான வார்த்தைகளில் கண்டனம் வெளியிட்டுள்ளது.

"குற்றம் சாட்டப்பட்டவர் கிரிமினல் குற்றத்தில் ஈடுபட்டார் என்பதற்காக, எந்தச் சொத்தையும் இடிக்க முடியாது" என்றும், "ஒருவர் குற்றவாளியாக இருந்தாலும், சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றாமல், அதைச் செய்ய முடியாது" என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

சட்டத்தை மீறிய கட்டடங்களை இடிப்பதாக இருந்தாலும், இடிப்பதற்கு முன் கால அவகாசம், நோட்டீஸ் அளிப்பது போன்ற நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விமர்சனங்கள் எல்லாம் ஆளும் பா.ஜ.க. அரசின் காதுகளில் அழுத்தமாக விழ வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### வீட்டுக்கே வந்த புகைப்படம்!



வெங்கடாச்சலம்

1987-ஆம் ஆண்டு தொடக்கத்தில், கழகத்தின் நிகழ்ச்சிக்காக ஈரோட்டில் இருந்து கழகத்தினருடன் சென்னை வந்திருந்தேன். அப்போது, அன்பகத்தில் கழகத் தலைவர் முத்தமிழறிஞரை சந்தித்து, அண்ணா அறிவாலயம் கட்டட நிதிக்காக சிறு தொகையை அளித்து, புகைப்படமும் எடுத்துக் கொண்டேன். எனது முகவரியை வாங்கிக் கொண்ட தலைவரின் புகைப்படக்காரர், இந்தப் படத்தை வீட்டுக்கே அனுப்பி வைத்தார்.

**– வெங்கடாச்சலம், மாவட்ட விவசாய அணித் தலைவர், ஈரோடு தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### திராவிட நாடு முழக்கம்!

1938-40-ஆம் ஆண்டுகளில் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்கிற கோரிக்கை வலுப்பெற்றது. அதற்குக் காரணமானவர்களில் ஒருவர் சர்.ஏ.டி.பன்னீர்செல்வம். இம்முழக்கம் உருவான அதே காலகட்டத்தில் 1940-ஆம் ஆண்டில், பிரிட்டிஷ்-இந்திய அமைச்சரின் ஆலோசகராக நியமனம் பெற்றார், பன்னீர்செல்வம். இங்கிலாந்து சென்று அந்தப் பொறுப்பை ஏற்பதற்காக, அந்த ஆண்டின் மார்ச் முதல் தேதியில், கராச்சி சென்று விமானத்தில் புறப்பட்டவர், விமான விபத்தில் பலியானார். அவர் பொறுப்பேற்று இருந்தால், 'திராவிட நாடு' கோரிக்கை ஆங்கிலேயர் ஆட்சியிலேயே நிறைவேறி இருக்கும்.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

591

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.